


மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தேசிய குடற்புழு நீக்க தினத்தை முன்னிட்டு, அல்ப்பண்டோசால் மாத்திரைகளை, அகஸ்தீஸ்வரம் வட்டம், ஈச்சன்விளை அரசு உயர்நிலைப்பள்ளியில் உள்ள மாணவ, மாணவியர்களுக்கு இன்று (10.08.2016) வழங்கினார். துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு. மதுசூதனன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு. வெ.ஜெயக்குமார் ஆகியோர் உடனுள்ளனர்.

செ.வெ.எண்: 512/2016 நாள்: 10.08.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தேசிய குடற்புழு நீக்க தினத்தை முன்னிட்டு, பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு அல்ப்ண்டோசால் மாத்திரைகளை இன்று (10.08.2016) வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறையின் மூலம், பொதுமக்களின் நலன் கருதி, பல்வேறு சுகாதார பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார்கள்.

மேலும் வளரும் குழந்தைகள் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்பதற்காக, தேசிய குடற்புழு நீக்க தினத்தில், 1 முதல் 19 வயது வரையிலான அனைத்து குழந்தைகளுக்கும் அல்பண்டோசால் மருந்து வழங்க சுகாதாரதுறை அலுவலர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் பள்ளி கல்விதுறை அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்திருந்தார்கள்.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், அகஸ்தீஸ்வரம் வட்டம், ஈச்சன்விளை அரசு உயர்நிலைப்பள்ளியில் தேசிய குடற்புழு நீக்குவதற்காக அல்ப்ண்டோசால் மாத்திரைகளை, பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு இன்று (10.08.2016) வழங்கி தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வளரும் குழந்தைகளுக்கு குடற்புழுக்கள் இருந்தால் உடல் வளர்ச்சி குறைபாடு, இரத்த சோகை மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு ஏற்படும் என்பதை கருத்தில் கொண்டு, வருடத்திற்கு இரண்டு முறை குடற்புழு நீக்க மாத்திரை வழங்கிட உத்தரவிட்டுள்ளார்கள். மேலும் கைகழுவுதல், கழிப்பறைகளை பயன்படுத்துதல் மற்றும் தன்சுத்தம் ஆகியவற்றை குழந்தைகளுக்கு கற்றுக் கொடுத்தால், அவர்களுக்கு ஏற்படும் இரத்த சோகை மற்றும் ஊட்டச்சத்து குறைபாடுகளை முற்றிலுமாக நீக்க முடியும் எனவும் தெரிவித்திருந்தார்கள்.

அதனடிப்படையில், நமது மாவட்டத்தில் 1 முதல் 5 வயது வரையில் உள்ள, குழந்தைகள் மற்றும் பள்ளி செல்லாத குழந்தைகளுக்கு ஊட்டச் சத்து மையத்திலும், பள்ளிச் செல்லும் குழந்தைகளுக்கு பள்ளிகளிலும் வைத்து, மதிய உணவுக்குப்பின் ஒரு மாத்திரை வழங்கிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

அவ்வகையில், அரசு மற்றும் அரசு உதவிபெறும் 810 பள்ளிகள், 274 தனியார் பள்ளிகளில் உள்ள 1 முதல் 19 வரையிலான குழந்தைகளும், 1401 அங்கன்வாடி மையங்களில் உள்ள குழந்தைகளும் என மொத்தம் 4.9 லட்சம் குழந்தைகளுக்கு அல்பண்டோசால் மாத்திரைகள் வழங்க, 426 சுகாதாரதுறை அலுவலர்கள், 1540 கல்வி துறை அலுவலர்கள் மற்றும் 1122 அங்கன்வாடி அலுவலர்கள் என மொத்தம் 3088 அலுவலர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் இம்மாத்திரைகள் உட்கொள்வதால் எந்த விதமான பக்க விளைவுகளும் ஏற்படுவதில்லை. உடல் நலக்குறைவோ அல்லது மற்ற காரணங்களினாலோ மாத்திரை உட்கொள்ளாத குழந்தைகளுக்கு 17.08.2016 அன்றும் மாத்திரை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

எனவே பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் மாத்திரை உட்கொண்டதனை உறுதிபடுத்தி, அவர்களது நல்வாழ்விற்கு ஒத்துழைப்பு நல்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு. மதுசூதனன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு. வெ.ஜெயக்குமார், நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர்.ராஜ்குமார், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி. பேச்சியம்மாள், அகஸ்தீஸ்வரம் பேரூராட்சி தலைவர் திரு. சந்தையடி பாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

-----------------------------------------------------------------------------------------------------------------------

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.